APPENDIX I.

[*Vide* Answer to starred question No. 1 on Page 3.]

ராஜபாளையத்தில் உள்ள ராமசாமி ராஜா பல்தொழில் — பயிற்சிப் பள்ளியின் நிதி கையாடல் செய்யப்பட்டதைக் குறித்து விசாரணை செய்கையில் தன் மைத்துனர் ஆர். ராமசாமியைக் காவலர்கள் கொடுமைப்படுத்தினர் என்று குற்றஞ்சாட்டி, அம்மநாயக்கன்பட்டியில் உள்ள ஆர். கோபால கிருஷ்ணன் 1966-இல் மனு ஒன்றைக் கொடுத்தார். அக்குற்றச்சாட்டுக்கள் விசாரணை செய்யப்பட்டு, அவை உண்மையல்ல என்று கண்டுபிடிக்கப்பட்டது. பின்னர் திரு. ஆர், ராமசாமியின் மனைவியும் திரு. ஆர். கோபாலகிருஷ்ணனின் உடன் பிறப்புமான திருமதி கோமளவல்லி அம்மாள் அதே போன்ற மனு ஒன்றைக் கொடுத்தார். அவருக்கும் இந்த விசாரணையின் முடிவைப் பற்றி 28—10—1967-ல் தெரிவிக்கப் பட்டது. பிறகு இந்த நிகழ்ச்சியை அவர் முன்னாள் முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக்கொண்டு வந்தார். திருமதி கோமளவல்லி அம்மாளுக்கு செய்தி தெரிவித்த பின்பு, இந் நிகழ்ச்சி குறித்து மேலும் புலனாய்வு செய்யவேண்டும் என்று அதன்மேல் ஆணையிடப்பட்டது. அதன்படி, சிவகாசி வருவாய் கோட்ட அதிகாரி மேலும் விசாரணைகள் நடத்தினர். ஆனால், திருமதி கோமளவல்லி அம்மாள் தம்முடைய குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரவாக எந்தவிதமான ஆவணங் களையும் விசாரணைக் காலத்தில் கொண்டு வரவில்லை. இந்நிகழ்ச்சியினைத் தொடர்ந்து பரிசீலனை செய்வதற்குரிய எவ்வித ஆதாரங்களையும் புகார் கொடுத் தவரோ அவர் சார்பாக விசாரிக்கப்பட்ட சாட்சிகளோ அளிக்கவில்லை என்றும், அந்தக் குற்றச்சாட்டுக்கள் ஐயமின்றி மெய்ப்பிக்கப்படவில்லை என்றும் வருவாய் கோட்ட அதிகாரி முடிவு செய்தார். இந்த முடிவும் திருமதி கோமளவல்லி அம்மாளுக்குத் தெரிவிக்கப்பட்டது.

திரு. என். சூரியநாராயணன் என்பவர் மதுரை நகரில் உள்ள ஒரு மருத்துவர். வருவாய் கோட்ட அதிகாரியினால் இவர் புகார் கொடுத்தவரின் தரப்பில் 1968 மார்ச்சில் விசாரணை செய்யப்பட்டார். சிவகாசி வருவாய் கோட்ட அதிகாரியின் முன் இவர் கொடுத்த வாக்குமூலத்தில், ராஜபாளையத்தில் உள்ள ராமசாமி ராஜா பல் தொழில் பயிற்சிப் பள்ளியில் கையாடல் செய்யப் பட்டது குறித்து திருவாளர்கள் கோபாலகிருஷ்ண ஐயங்கார், ரங்கசாமி ஐயங்கார், ஆகியோர் மதுரை நகரில் உள்ள காவலர்களால் வெவ்வேறு நாட் களில் அழைத்துச் செல்லப்பட்டனர் என்று மருத்துவர் சூரியநாராயணன் சாட்சியமளித்துள்ளார்.

காவலர்கள் அநீதியாக சிறைப்படுத்தினர் என்றும் கொடுமைப்படுத்தினர் என்றும் மனுதாரர்களாகிய திரு. கோபாலகிருஷ்ணனும் அவரின் உடன் பிறப் பான திருமதி கோமளவல்லி அம்மாளும் சாட்டிய குற்றச்சாட்டுக்கள் விசாரிக் கப்பட்டு, குற்றச்சாட்டுகள் உண்மையற்றவை என்று 1967-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களிலேயே முடிவு செய்யப்பட்டது. அரசு ஆணைகளின்படி, 1968 ஆம் ஆண்டு பிப்ரவரியில் வருவாய் கோட்ட அதிகாரியினால் புதிதாக விசாரணை ஒன்றும் நடத்தப்பட்டது. இருந்த போதிலும், மனுதாரர்கள் அவர்களுடைய புகார்களை மெய்ப்பிப்பதற்கான ஆவணங்களைக் கொண்டு வரவில்லை. புதிதாக விசாரணையை நடத்திய சிவகாசி வருவாய் கோட்ட அதிகாரியும் இந்தக் குற்றச் சாட்டுக்கள் ஆதாரமற்றவை என்ற முடிவிற்கு வந்தார். அவருடைய முடிவினை அரசு ஏற்றுக் கொள்கிறது.